**மொரட்டுவ பல்கலைக்கழகம் - 2020**

---

1. **நிதிக் கூற்றுகள்**

1.1 **அபிப்பிராயம்**

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4. **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிரு-க்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.
- எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை.

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் XX அத்தியாயத்தில் 3.1 பிரிவு | பல்கலைக்கழகத்தின் தாபன விதிக் கோவைக்கு முரணாக கல்விசார் பணியாற்றொகுதியினரின் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தப்படாது மீளாய்விற்கான ஆண்டுக்காக ரூபா. 1,459,550,041 ஐ சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | மொத்த பல்கலைக்கழக முறைமையினுள் இந்த முறைமை பயன்படுத்தப்படுவதால், மொரட்டுவ பல்கலைக்கழகத்திலும் இந்த முறைமை செயற்படுத்தப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். | உரிய சட்டங்கள், விதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் தொடர்பான சுற்றுநிருபம் | மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2020 ஆண்டுக்கான செயற்றிட்டம் 2020 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட போதும், கடந்த ஆண்டு முழுவதும் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் காணப்பட்ட ஊழியர்களின் பிரச்சினையால் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கு முடியவில்லை.<br>பெறுகை திட்டம் தயாரித்தல் கொவிட் நிலைமையால் ஏற்பட்ட ஊழியர் பற்றாக்குறையால் தாமதம் ஏற்பட்டது. | உரிய சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்திற்கு உரியதாகவுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துக்களின் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | நிறுவனத்திற்கு உரியதாகவுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி நிலையான சொத்துக்களின் பதிவேடு கணினி முறைமை சார்ந்து பராமரிக்கப்படுவதுடன், கணக்காய்வு அலுவலர்கள் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதிப் பிரிவிடம் சென்று அதனை பரிசோதனை செய்யலாம். | உரிய சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும |

## 2. நிதிசார் மீளாய்வு

-----------------------

### 2.1 நிதிசார் விளைபயன்

-------------------------

மீளாய்விற்கான ஆண்டின் தொழில்சார் விளைபயன் ரூபா. 258,401,205 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.740,367,945 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.481,966,740 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் மீண்டுவரும் செலவினம் பொருட்டு அரசாங்கத்தின் அளிப்புகளின் கிடைக்கப்பெறல் ரூபா.118,080,000 ஆல் அதிகரித்தல், வருடாந்த பணிக்கொடை செலவினம் ரூபா. 334,841,215 மற்றும் உடன்படிக்கை சேவைகளின் செலவினம் ரூபா. 60,616,375 ஆல் குறைவடைந்துள்ளமை இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணங்களாகியுள்ளன.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 கருத்து வேறுபாடுகளுக்கான கொடுக்கல் வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) யுனி கன்சல்டன்ஸி கம்பெனிக்கு சட்டத்துடனான சட்டகத்தை தயாரித்து கொள்வதற்காக பொது தொழில்முயற்சிகள் குழுவால் பல்கலைக்கழகத்திடம் அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கட்டளையிடப்பட்ட போதிலும், அறிக்கையின் திகதி வரை அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி 2020 செப்தெம்பர் மாதமாகும்போது அனுமதிக்காக அமைச்சரவை பத்திரம் மூலம் அமைச்சிடம் முன்வைக்கப்படவுள்ளது. | அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்வதை துரிதமாக்கல் வேண்டும். |
| (ஆ) 2009 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்காக Bachelor of Information Technology (BIT) கற்கைநெறி பொருட்டு முகாமைத்துவ கட்டணமாக பல்கலைக்கழகத்திற்கு அறிவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 35,186,922 ஆன தொகை உடன்படிக்கையின் பங்காளர் அல்லாத UNI Consultancy கம்பெனியிடம் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த CODL நிலையம் ஆரம்பம் தொடக்கம் பல்கலைக்கழகத்திற்கு வெளியில் தற்காலிகமாக பல இடங்களில் தாபிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர், தற்போதுள்ள இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. தற்காலிக இடங்களுக்கிடையில் அலுவலக உபகரணங்கள் மற்றும் கடிதக்கோவைகள் காணமல் போயுள்ளது என்று அவதானிக்கப்படுகிறது. | உடன்படிக்கைகளை மேற்கொள்கையில் மற்றும் நடைமுறைப்படுத்துகையில் வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 நிதியங்களின் குறை பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா. 2,676,340 ஆன 16 புலமை பரிசில் நிதியங்களை 03 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரை எந்தவொரு புலமைப் பரிசில்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்த குறை பயன்பாட்டு புலமைப் பரிசில் நிதியம் தொடர்பில் விபரமாக கண்டறிவதற்கும், செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வருவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | நிதியங்களை ஏற்புடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழக கற்கைநெறிகள் மற்றும் 34 திணைக்களத்து அபிவிருத்தி நிதியங்களின் மொத்தம் ரூபா. 13,921,449 ஆண்டில் செயலற்று காணப்பட்டதுடன், 21 நிதியங்களின் மொத்தம் ரூபா. 6,074,585 4 ஆண்டு காலம் தொடக்கம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | திணைக்களத்து அபிவிருத்தி நிதியம் 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலையின் மத்தியில் பல மாதங்கள் முற்று முழுதாக மூடப்படுதலும், ஏனைய மாதங்களில் கற்கை பிரிவுகள் பூரண ஆற்றலுடன் செயற்படாமையும் காரணமாக இந்த நிதியங்கள் 2020 ஆம் ஆண்டில் செயலற்று காணப்படுகின்றன. | நிதியங்களை ஏற்புடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும் |

## 3.3 மனித வளங்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாராத பணியாற்றொகுதியும் உண்மையான பணியாற்றொகுதியும் ஒப்பிடுகையில் ஒழுங்குமுறையில் 321 மற்றும் 232 வெற்றிடங்கள் காணப்பட்டன. கல்விசார் பணியாற்றொகுதியில் காணப்பட்ட வெற்றிடங்களை பூர்த்தி செய்யாமை காரணமாக வெளியக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்து மீளாய்விற்கான ஆண்டில் மட்டும் ரூபா.30,962,883 ஐ கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசாரா பணியாற்றொகுதியில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பத்திரிக்கை அறிவிப்புகள் மூலம் விண்ணப்பங்கள் கோரிய போதும், பல்வேறு காரணங்களால் பல்கலைக்கழகங்களை மூடப்பட்டதால் செல்லுபடியான காலம் விஞ்சி உள்ளது. மீண்டும் வெளியிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.. பெயர் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ள பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பிரிவுகளின் தேவைக்கேற்பவும், பிரிவுகளின் தலைவர்களது கோரிக்கை பிரகாரமும் நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், சம்பந்தப்பட்ட பதவிகளின் பொருட்டு தகைமைகள் பெற்ற விண்ணப்பத்தாரிகள் விண்ணப்பிக்காமையால் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியவில்லை என்பதுடன், அதன் போது கற்கை நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு வெளியக விரிவரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்படுகிறது. | தேவைகள் உள்ள பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |